# நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள்

**முனைவர் கி.தினேஷ்குமார்**
வடுவூர்

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** 1

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

தமிழோடு இயைந்து இறைவனை இசையால் பாடிய இசைப் பாடலாசிரியர்கள் வரிசையில் கோபாலகிருஷ்ண பாரதியார் மிகவும் போற்றுதலுக்குரியவராவார். சங்கீத மும்மூர்த்திகளாகிய தியாகராஜர், முத்துஸ்வாமி தீட்சிதர் மற்றும் சியாமா சாஸ்திரிகளின் சமகாலத்தில் வாழ்ந்து தமிழ்மொழியில் கீர்த்தனைகளை இயற்றித் தமிழிசை வரலாற்றில் தனது முத்திரையைப் பதித்தவர் பாரதியார் ஆவார். இவர் தில்லை சிதம்பரநாதரைப் போற்றிப் பல பாடல்கள் இயற்றிருப்பினும் இவரால் இயற்றப்பட்ட நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள் இசை உலகில் அழியாப் புகழாகவும் இவரின் தனித்த அடையாளமாகவும் காணப்படுகிறது. இத்தகைய நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளின் சிறப்புகளை எடுத்தாராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### கோபாலகிருஷ்ண பாரதியார்

கி.பி. 18111 ஆம் ஆண்டு திருவாரூர் மாவட்டத்தில் நரிமணம் என்னும் சிற்றூரில் கோபாலகிருஷ்ண பாரதியார் பிறந்தார். இவரது தந்தை ராமசுவாமி பாரதி ஆவார். இவர் இசைக்கலையில் சிறந்து விளங்கியுள்ளார். ஆகையால் கோபாலகிருஷ்ண பாரதியார் சிறுவயது முதல் சங்கீதத்தைக் கற்றறிந்து வந்ததுடன் அத்வைதம், யோக சாத்திரம் போன்றவற்றிலும் தேர்ச்சிபெற்று வந்தார். அவர் காலத்தில் இருந்த மற்ற இசைப் பாடகர்களின் கச்சேரிகளை அடிக்கடிக் கேட்டுத் தன் இசையஅறிவை மேலும் மெருகேற்றிக் கொண்டார். மாயாவரத்தில் ஒரு குருவிடம் இருந்து அத்வைதம், யோக சாத்திரம் ஆகியவற்றை கற்றறிந்து அக்கருத்துகளை வெளிப்படுத்தும்வகையில் இவர் தமிழிசைப் பாடல்களை புனைந்தார். இவர் இயற்றிய பல கிருதிகள் ஏனையோரால் பாடப்பட்டு இவர் காலத்திலேயே மிகவும் பிரபலம் அடைந்து வந்தது. தொடக்கத்தில் முடிக்கொண்டான் என்னும் ஊரில் வாழ்ந்த இவர் பின் ஆனைதாண்டவபுரத்தில் வாழ்ந்த காரணத்தால் முடிகொண்டான் பாரதி எனவும் ஆனைதாண்டவ பாரதி எனவும் போற்றப்பட்டார்.

தஞ்சையை ஆண்ட மாரத்திய மன்னர்கள் அமர சிம்ம ராஜா காலத்தில் அம்மன்னரால் ஆதரிக்கப்பெற்ற ராமாதாஸ் என்னும் இந்துஸ்தானி கலைஞருடன் இந்துஸ்தானி இசையினைக் கற்றறிந்தார். இதுபோல அம்ரசிம்ம மன்னரால் ஆதரிக்கப்பெற்ற கனம் கிருஷ்ண அய்யரிடமிருந்தும் இசைநுட்பங்களைக் கேட்டறிந்துகொண்டார். அவர் காலத்தில் வாழ்ந்த பல இசைவாணர்களுடனும் மிக நட்புடன் பழகி வந்தார். அந்த வகையில் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜ சுவாமிகளை சந்திக்க சென்றபோது ஆபோகி இராகத்தில்

“சபாபதிக்கு வேறு தெய்வம்” என்னும் பாடலை அவரிடம் இயற்றிக்காட்டி தியாகராஜரால் பாராட்டுப் பெற்றார். இதுபோல அனந்த பாரதி, வேதநாயகம் பிள்ளை, சிதம்பர சிவசங்கர தீட்சிதர், இராமசாமி சிவன், மகாவைத்திய நாதய்யர் போன்ற இசை மேதைகளின் நட்பைப் பெற்று விளங்கினார்.

**நந்தனார் சரித்திரம்**

நந்தனார் சரித்திரம் என்பது தமிழிசைக் காவியமாகும். இது திருநாளைப் போவார் என்ற காரணப் பெயரால் போற்றப்படுகிறது. இது 63 நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப்படும் நந்தனார் வாழ்க்கையில் இறைவனோடு நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் சில அதிசய சம்பவங்களை இசைப் பாடல்கள் கொண்டு விளக்கும் தொகுப்பாக கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றியுள்ளார். நாகப்பட்டினம் நகரில் வாழ்ந்த கந்தப்பச் செட்டியாரின் தூண்டுதலின் பயனாக நந்தனார் சரித்திரத்தை இயற்றத் தொடங்கினார். தொடங்கிய காலத்தில் “பருன மருங்கணையும்” எனத் தொடங்கும் சிறுச்செய்யுளாக நந்தனார் சரித்திரத்தை இயற்றியருளினார். அதனைக் கந்தப்பச் செட்டியார் மற்றும் சான்றோர் பெருமக்களிடம் காண்பித்துப் பெரும் வரவேற்பைப் பெற்றார். பின் மாயூரத்தில் சில காலம் தங்கி நந்தனார் சரித்திரத்தைக் கீர்த்தனை காவியமாக வடித்தார்.

“செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்” என சுந்தரர் போற்றும் திருத்தொண்டத் தொகையினையும், நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி மற்றும் சேக்கிழார் அருளிய அருளிய பெரிய புராணம் ஆகியவற்றில் காணப்படும் நந்தனார் பற்றிக் காணப்படும் குறிப்புகளை அடிப்படையாக வைத்து இச்சரித்திரத்தைப் பாரதியார் நிறைவு செய்துள்ளார். இருப்பினும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையின் கதையில் இடம்பெறும் வேதியரைப் பற்றிய செய்தியும் நந்தனாரை அவர் துன்புறுத்திய செய்தியும் பெரிய புராணத்தில் இடம்பெறாத காரணத்தால் இவரது கற்பனை மிகுதிக்குட்பட்டு இக்கீர்த்தனைகள் இடம்பெறுவதாகச் சிலர் கருதினர். இதுபோன்ற காரணத்தால் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதியின் நந்தனார் சரித்திரத்திற்குப் பாயிரம் வழங்க மறுத்தார். ஆனால் தனது சரித்திரக் கீர்த்தனைக்கு மீனாட்சி சுந்தரமே பாயிரம் வழங்க தகுதியானவர் என்று எண்ணிப் பலமுறை மீனாட்சி சுந்தரம் பிள்ளையைப் பாரதியார் அணுகியும் பலன் இல்லாததால் தனது இசை ஞானத்தால் அவரைக் கவர்ந்து இறுதியில் மீனாட்சி சுந்தரத்தால் பாயிரம் பெறப்பட்டு மகிழ்ந்தார். மிகவும் சிறப்புடன் இயற்றப்பட்ட சரித்திரக் கீர்த்தனையானது கந்தப்பச் செட்டியார் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அரங்கேற்றம் செய்யப்பட்ட நாள் தொடங்கிப் பல இடங்களில் இந்த சரித்திரக் கீர்த்தனமானது இடம்பெற்றுப் பெரும் புகழ்பெற்று வந்தது. கோபாலகிருஷ்ண பாரதியார் காலத்திலேயே அவரது நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள் நூலாக வெளிவந்தது. பிரெஞ்சு அலுவலர் சீசே முயற்சியால் கி.பி.1848இல் இந்நூல் ெ

**நந்தனார் கதை**

சோழ நாட்டில் ஆதனூர் என்ற ஒரு சிற்றூர் இவ்வூரில் புலைப்பாடியில் நந்தனார் பிறந்தார். பிறப்பு எப்படியாயினும் நந்தனார் சிவபெருமான் மேல் அதிக பக்தியோடு வாழ்ந்தார். நந்தனார் ஓர் அந்தணரின் பண்ணை ஆளாக வேலை செய்தார். எப்பொழுதும் சிவனை நினைத்து வாழ்ந்த நந்தனார் சிதரம்பரம் போக விரும்பினார். பார்ப்பவரிடமெல்லாம் நாளை போவேன் என்று சொல்லி சொல்லி மகிழ்ந்தார். இதனால் இவரை நாளைப் போவார் என்றும் அழைத்தனர். ஆனால் சிதம்பரம் போய் வர அந்தணர் அனுமதி கொடுக்கவில்லை. வயலில் அறுவடை முடிந்தபின் போகலாம் எனக் காலங்கடத்தினார். இறைவனைக் காணத் துடித்த நந்தனார் உள்ளம் இறைவன் அறியாததா? அதிசயம் நிகழ்ந்தது. என்ன அதிசயம்? மறுநாளே நெற்கதிர்கள் அறுவடைக்குத் தயாராக விளைந்திருந்தன. அந்தணர் அதிசயித்தார். நந்தனாரின் சிவபக்தியின் உயர்வை உணர்ந்தார். சிதம்பரம் போக அனுமதி கொடுத்தார். பக்தி மேலிடச் சிதம்பரம் சென்றார். நந்தனார் அங்குள்ள அந்தணர்களாகிய கோயில் தீட்சிதர்கள் அவரை வரவேற்றனர். நடேசப் பெருமானின் திருநடனக் காட்சியைக் கண் குளிரக் கண்டார் நந்தனார். அப்படியே ஒளி வெள்ளத்தில் மூழ்கினார். பேரானந்தப் பேறு பெற்றார். இத்தகைய பேறு பெற்ற நந்தனார் அறுபத்து மூன்று சைவ நாயன்மாரில் ஒருவராக மதித்துப் போற்றப்படுகிறார்.

**நந்தனார் சரித்திரத்தின் அமைப்பு**

கோபாலகிருஷ்ண பாரதி கதாகாலட்சேபம் செய்யும்வகையில் இச்சரித்திரத்தை உருவாக்கினார். பல இசைப்பாடல்களுடன் வசனப் பகுதியையும் இணைத்து மிகச் சிறப்பாக செய்துள்ளார். இவற்றில் காணப்படும் இசைப்பாடல்கள் கீர்த்தனை, கட்கா, பெரிய கட்கா, தண்டகம், ஸ்லோகம், தேவாரம், தரு, அகராதி, நொண்டிச் சிந்து, சிந்து, கண்ணி, அகராதி, தோடயம், மங்களம், ஆனந்த களிப்பு, அலங்காரம், அகவல், ஏசல், சவாயி, துக்கடா, கலித்துறை மற்றும் விருத்தம் ஆகியவற்றைக்கொண்டு சிறந்ததொரு அமைப்புடன் விளங்குகிறது.

**நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் காணப்படும் இராகங்கள்**

தற்பொழுது பாடப்பெற்றுவரும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் இடம்பெறும் இராகங்கள் சில மாற்றங்களை பெற்றுள்ளன. இம்மாற்றங்களை கதாகாலட்சேப மேதை கிருஷ்ண பாகவதர் தொடங்கி இசை மேதைகள் சிலர் ஏற்படுத்தியுள்ளனர். பழமையான பதிப்பு ஒன்றில் காணப்பட்ட இராகங்களின் குறிப்புப்படி நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் ஆனந்த பைரவி, நாத நாமக்கிரியா, செஞ்சுருட்டி, கல்யாணி, அசாவேரி, மோகனம், நாட்டை, கமாசு, காம்போதி, வராளி, சங்கராபரணம், சாவேரி, அங்குசதோணி, அபுரூபம், பெஹாக், மாஞ்சி, புன்னகவராளி, தோடி, எதுகுல காம்போதி, யமுனா கல்யாணி, சாரங்கா, கௌளிபந்து, பூர்வ கல்யாணி, கன்னடபெஹாக், உசேனி, சுருட்டி, சஹானா, சௌராஷ்டிரம், இராகமாலிகா (வராளி, தோடி, மத்யமாவதி, கேதாரகௌளை, புன்னகவராளி, நாதநாமக்ரியா, மாஞ்சி, மோகனம், ஆரபி, அசாவேரி, சாவேரி), பேகடை, அமிர்கல்யாணி, பைரவி, தேவமனோகரி, சாமா, முகாரி, கரஹரப்ரியா, காபி, உசேனி, இந்துஸ்தான் காபி, ரீதி கௌளை, கௌரி மனோகரி, ஆகிரி, தேவகாந்தாரி, மாயா மாளவ கௌளை, சக்ரவாகம், பூர்ண சந்திரிகா, பலஹம்சா போன்ற இராகங்கள் காணப்படுகின்றன. கோபாலகிருஷ்ண பாரதி ஹிந்துஸ்தானி இசையும் அறிந்திருந்ததால் சில பாடல்களை ஹிந்துஸ்தானி மெட்டுகளில் பெஹாக், அமீர் கல்யாணி போன்ற ாகஜதுர்மு

**தாளங்கள்**

நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் ஆதி, ரூபகம், சாபு, ஏக தாளம், திரிபுடை தாளம். அடதாளம், ஜம்பைத் தாளம் போன்றவை இடம்பெற்றுள்ளன.

**நந்தனார் சரித்திரத்தில் காணப்படுகின்ற புகழ்பெற்ற பாடல்கள்**

1. ஆடும் சிதம்பரமோ - பெஹாக் - ஆதி
2. எப்போ வருவாரோ - செஞ்சுருட்டி - ஆதி
3. வருகலாமோவையா - மாஞ்சி - ரூபகம்
4. ஐயே மெத்தகடினம் - புன்னகவராளி - ஆதி
5. எந்நேரமும் உந்தன் - தேவகாந்தாரி - ஆதி

எளிமையான தமிழிலே கருத்தாழமும் இசைநயமும்கொண்டு இறை உணர்வைத் தூண்டும் விதத்தில் உருவாக்கிய நந்தனார் சரித்திரம் அழியாப் புகழும் பெயரும் கொண்டதாக தற்போதுவரை திகழ்கிறது. கோபாலகிருஷ்ண பாரதி வாழ்ந்த காலத்திலேயே இக்கீர்த்தனைகள் நூலாக வெளிவந்தும் அதைப் பலர் வாங்கி மனதில் இடம்பெறச் செய்தும் புகழ்பெற்றது. தோற்றம் பெற்ற காலம் தொடங்கி கதாகாலட்சேபமாகவும், நாடகமாகவும், திரைப்படமாகவும் இது மக்களை மகிழ்வித்து வந்துள்ளது. மேலும் நாட்டிய நாடகமாகப் பல மேடைகளில் இன்றளவும் தனது புகழ் மங்காது மக்கள் மனதில் நிலைத்துக் காணப்படுகிறது.